# துறையூர் நகராட்சி

2019 ஆம் வருடம் ஜீன் மாதம் நாள் 26.06.2019 ஆம் புதன் கிழமை ( தமிழ் விகாரி வருடம் ஆனி மாதம் நாள்.11) பிற்பகல் 4.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களால் நகர்மன்ற பொருள் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய சிறப்புக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை : திரு. வே. நவேந்திரன்,
தனி அலுவலர்

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 26.6.2019 | 01 | நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதம் ந.க.எண்.48800/2006/எல் நாள்20.06.2019–ல், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி என்ற பணியமைப்பின் கீழ் புதிய பணியிடங்களை உருவாக்குவது தொடர்பாகவும், அதற்கு ஈடாக சில பணியிடங்களை திரும்ப ஒப்படைப்பது தொடர்பாகவும் விபரங்கள் தரப்பட்டுள்ளன.<br>நகராட்சிகளின் கணக்குகளை இன்றைய தேவைக்கேற்ப பராமரிக்கவும், நிதி மேலாண்மையை திறம்படுத்தவும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி என்ற பணியமைப்பு உருவாக்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சரவர்கள் 1.04.2013 அன்று சட்டமன்றத்தில் அறிவித்தார் என்றும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணி உருவாக்குவதற்கான தீர்மானங்களை அனைத்து நகராட்சிகளும் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்துள்ளன என்றும், அத் தீர்மானங்கள் 13.06.2013 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும், இதனடிப்படையில் அரசாணை (எம்எஸ்)எண் 26, நகராட்சி நிர்வாக (ம) குடிநீர் வழங்கல் துறை (எம்இ1) நாள் 10.02.2016ல் தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பிற்கான பணி விதிகள் | **தீர்மான எண். 150 அனுமதிக்கப் பட்டது.** |

(Tamilnadu Municipal Accounts Service Rules) 2016 உருவாக்கப்பட்டு 11.02.2016 அன்று அரசு கெஜட்டில் வெளியிடப்பட்டது என்றும், நகராட்சி நிர்வாக ஆணையரிடமிருந்து வரப்பெற்றுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2) மேலும், தமிழ்நாடு நகராட்சி கணக்குப் பணியமைப்பின் கீழ் பணியிடங்களை புதிதாக உருவாக்க ஏதுவாக செம்பாக்கம், வாலாஜாப்பேட்டை, வந்தவாசி மற்றும் கீழக்கரை நகராட்சிகள் தவிர அனைத்து நகராட்சிகளும் தலா ஒரு இளநிலை உதவியாளர் பணியிடத்தை திரும்ப ஒப்படைத்து (Surrendor) தீர்மானம் நிறைவேற்றி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பி வைத்தன என்றும் அத்தீர்மானங்கள் 07.07.2017 அன்று அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3) தற்போது தமிழ்நாடு நகராட்சி கணக்குப்பணியின் (Tamilnadu Municipal Accounts Service Rules) கீழ் துறையூர் நகராட்சிக்கு கீழ்க்கண்டவாறு புதிய பணியிடங்கள் உருவாக்கிட திருத்திய கருத்துரு அரசுக்கு 03.01.2019 அன்று அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கணக்கர் | Accountsnt | 1 |
| கணக்கு உதவியாளர் | Accounts Assistant | 1 |

மேற்கண்டவாறு Tamilnadu Municipal Accounts Service Rules பணியமைப்பில் கணக்குப் பணிக்கான பிரத்யேக பணியிடஙகளை உருவாக்குவதற்கு ஈடாக ஏற்கனவே தமிழ்நாடு நகராட்சி (Tamilnadu Municipal Accounts Service Rules) கணக்கு பணி தொடர்பாக உருவாக்கப்பட்டுள்ள பணியிடம்/ பணியிடஙகளையோ அல்லது வேறு பணியிடத்தையோ ஒவ்வொரு நகராட்சியும் கூடுதல் சம்பள செலவினை தவிர்க்கும் பொருட்டு திரும்ப ஒப்படைக்க வேண்டியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் தெரிவித்துள்ளார். இந்நகராட்சிகளில் கீழ்க்காணும்

| | | | |
|---|---|---|---|
| | | பணியிடத்தினை திரும்ப ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்று. (ந.க.எண்.2381/2017/சி1)<br>**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம். | |

ஒம்/—வே.நவேந்திரன்,
தனி அலுவலர்

//உண்மை நகல் //

ஆணையர்,
துறையூர் நகராட்சி.

## துறையூர் நகராட்சி

2019 ஆம் வருடம் ஜீன் மாதம் 28.06.2019ஆம் வெள்ளி கிழமை ( தமிழ் விகாரி வருடம் ஆனி மாதம் நாள்.13) பிற்பகல்4.30 மணிக்கு நகராட்சி பிற்பகல் அலுவலகத்தில் தனி அலுவலர் மற்றும் ஆணையர் சாதரணக்கூட்ட நடவடிக்கைகள்.

முன்னிலை:திரு.வே. நவேந்திரன்,
தனி அலுவலர்.

| மன்ற கூட்டம் நடை பெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்ற கூட்ட பொருள் | | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|---|
| 28.6.2019 | 01 | ஆணையரின் தினசரி ஜீன் மாதம் 2019 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு :பதிவு செய்யலாம். | தீர்மான எண்151 பதிவு செய்யப் பட்டது |
| 28.6.2019 | 02 | பொறியாளர் தினசரி ஜீன் மாதம் 2019 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு :பதிவு செய்யலாம். | தீர்மான எண்152 பதிவு செய்யப் பட்டது |
| 28.6.2019 | 03 | துப்பரவு அலுவலர் தினசரி ஜீன் மாதம் 2019 நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>அ.கு :பதிவு செய்யலாம். | தீர்மான எண்153 பதிவு செய்யப் பட்டது |

<table>
<tr>
<td>28.6.2019</td>
<td>04</td>
<td>
இந்நகராட்சி பொது சுகாதார பிரிவின் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் வீடு, வீடாக குப்பைகளை BOV மற்றும் LCV வாகனம் மூலம் மக்கும், மக்காத குப்பைகளாக தரம் பிரித்து கிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. அவ்வாறு மக்கும் குப்பைகளை இயற்கை முறையில் விரைவாக மக்குவதற்கு E.M Solution கரைசல் தேவைப்படுவதால் பொது சுகாதார அவசர அவசியம் கருதி E.M Solution சப்ளை செய்ய வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்</th><th>பொருள் விபரம்</th><th>GNANAM ENVIRONMENT SERVICES , No. 51-D, Kollupettai Street, Pudu Road, East Gate, Thanjavur-613001.</th><th>GREEN AGRO ENVIRONMENT SERVICES NO.6 L Endathur Road, 66 Thandalam, (Near Bus Stand) Kancheepuram Dist-603306.</th><th>GREENBLUE SANITAION SERVICES, No. 33/22 Old Housing Unit, Pudukkottai Road, Thanjavur-613 007.</th></tr>
<tr><td>01</td><td>E.M Solution</td><td>ரூ. 640 (ஒரு லிட்டரின் விலை)</td><td>ரூ. 690 (ஒரு லிட்டரின் விலை)</td><td>ரூ. 740 (ஒரு லிட்டரின் விலை)</td></tr>
</table>
அலுவலக குறிப்பு :<br>
வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த GNANAM ENVIRONMENT SERVICES அவர்களின் குறைந்த விலைப்புள்ளியை ஏற்கப்பட்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.428/2019/எச்1)
</td>
<td>தீர்மான எண்154 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>28.6.2019</td>
<td>05</td>
<td>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 9 மின்கலம் பொருத்திய மூன்று சக்கர வாகனம் (BOV) வீடு வீடாக சென்று மக்கும் மக்காத கழிவுகளை தினச 400 வீடுகளில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மேலும் இப்பணியில் தொய்வுகள் ஏற்படாமல் இருக்கவும் சிறப்பாக பணிகள் நடைப்பெறவும், 9 மின்கலம் பொருத்திய மூன்று சக்கர வாகனங்களில் (BOV) அவ்வாப்போது ஏற்படும் சிறு பழுதுகளை சப்பார்க்க பணிக்கு 26.06.2019 வரை விளைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்பிடி விளைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.<br><br>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விவரம் (ஒரு வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு செலவு)</th></tr>
<tr><td>1</td><td>BHAGAVATHI ELECT RICKSHAW, PERUMAL KOVIL(OPP), MEENASHI NEW RAMANAD ROAD, MADURAI.9</td><td>ரூ.33600/-</td></tr>
<tr><td>2</td><td>UNAS E RICKSHAWS, SHOWROOM:14/63A, MADURAI ROAD, NEAR RELIANCES PETROL BUNK KOVILOOR. KARAIKUDI.</td><td>ரூ.22200/-</td></tr>
<tr><td>3</td><td>MADURAI MOTORS, SHOP NO:16/25, KALAVASAL BYPASS, PALANGANATHAM, MADURAI.3</td><td>ரூ.36000/-</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்155 அனுமதிக்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | மேற்க்கண்ட விளைப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் உள்ள நிறுவனத்தின் விளைப்புள்ளி குறைவாக உள்ள நிறுவனத்திற்கு பணி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2126/2019/எச்1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.6.2019 | **06** | துறையூர் நகராட்சியில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளுக்கு கணினியில் மதிப்பீடு தயார் செய்தல், புதிய திட்டங்களுக்கு கருத்துரு தயார் செய்தல், அன்றாடம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தட்டச்சு செய்தல், நர்மன்ற கூட்ட பொருள் தட்டச்சு செய்தல் போன்ற பணிகளை இந்நகராட்சியில் தட்டச்சர் பணியிடம் காலியாக உள்ளதால் மேற்படி பணிகளை செய்வதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. எனவே, ஆகஸ்ட் 2019 முதல் ஒருவருட காலத்திற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதிய விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையில் தட்டச்சு பணிக்காக ஒரு பணியாளர் பெற்று பணி செய்திட இதற்கான உத்தேச செலவினம் ரூ.1.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.3618/2016/இ1)<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனமதிக்கலாம். | தீர்மான எண்156 அனுமதிக்கப் பட்டது. |

<table>
<tr>
<td>28.6.2019</td>
<td>07</td>
<td>
இந்நகராட்சிக்கு சொந்தமான நகராட்சி ஆடுவதை செய்யும் இடத்தில் கட்டணம் வசூல் செய்துக்கொள்ளும் குத்தகை உரிமம், பெரம்பலூர்சாலை, திருச்சி, துறையூர் தம்மம்பட்டி சாலை ஓரபுளிய மர மேல் மகசூல் குத்தகை உரிமம் சுவாமிநாதன் தினசரிமார்கெட் கடைகள் 43,44 மற்றும் 45க்கான குத்தகை உரிமம் வாரச்சந்தையில் உள்ள ஆட்டிறைச்சி கடைகள் 2,3,4,6,8,9,10,11,12,13,14,15,16, மற்றும் 17 காசிகுளம் பாசனபகுதி விளைநிலம் பயன்பாட்டிற்கான குத்தகை பேருந்து நிலையத்தில எடைபார்க்கும் மெஷின் ஒன்று வைத்து கட்டணம் வசூல் மேற்கண்ட குத்தகை மற்றும் உரிமங்கள் 2019-2020 முதல் 2021-2022 முடிய மூன்றாண்டுக்கான உரிமம் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் 10.07.2019ம் தேதி நடைபெறும் விபரத்தினை கீழ்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் பெயர்</th><th>விளம்பரம் செய்யப்பட்ட நாள்</th><th>தொகை (ரூபாய்)</th></tr>
<tr><td>1</td><td>மாலைமுரசு, திருச்சி பதிப்பு</td><td>22.06.2019</td><td>ரூ.10,500/-</td></tr>
</table>
மேற்கண்ட நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.10,500/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்ற அனுமதி
</td>
<td>தீர்மான எண்157<br>அலுவலகக் குறிப்புகள்<br>அ)<br>ஆ)அனுமதிக் கப்பட்டன</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டப்படுகிறது.(ந.க.எண்.1961/2019/அ1)<br><br>**அலுவலக குறிப்பு:** அ) அனமதிக்கலாம்.<br>ஆ) செலவினத்தை நகராட்சி பொதுநிதிலிருந்து செலவுசெய்யலாம். | |
| 28.6.2019 | **08** | துறையூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வரும் திரு.ஆர். துரை என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2019ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன் படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்கு தொகை ரூ.10,000/- வழங்க வேண்டி உள்ளது. எனவே மேற்படி, பங்குத் தொகையினை திரு.ஆர். துரை, துப்புரவு பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1329/2019/சி1)<br><br>**அலுவலக குறிப்பு:** அ) அனமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்158 அலுவலகக் குறிப்புகள் அ)மற்றும் ஆ)அனுமதிக் கப்பட்டன. |
| 28.6.2019 | **09** | நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமை பொறியாளர் சென்னை அவர்களின் செயல் முறை ந.க.எண்.3144/2019/குவ2/ நாள்.10.04.2019-ன் உத்திரவில் துறையூர் நகராட்சியில் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்வு செய்து உபவிதிகள் திருத்தம் செய்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட வைப்புத் | தீர்மான எண்159 அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | தொகை மற்றும் குடிநீர் கட்டணம் உயர்த்தப்பட்டதை பொது மக்களின் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகள் பெற மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மூலம் மாலை முரசு நாளில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டணம் ரூ.11812/- ஐ Bnight Advertising நிறுவனத்திற்கு வழங்கவும் மேற்கண்ட குடிநீர் திட்ட உபவிதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிட பக்கம் 1-க்கு ரூ.2100/- வீதம் 16 பக்கத்திற்கு ரூ.33600/- அரசு தலைப்பில் கொடுக்கவும் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.1387/2018/இ2)<br>**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>. | |
| 28.6.2019 | **10** | துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பு கட்டிடங்கள், சினிமா, தியேட்டர்கள், கல்யாண மண்டபங்கள், தொழிற்சாலை கட்டிடங்கள், வணிகக்கட்டிடங்கள், வங்கிகள், மருத்துவமனைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் செயல்படும் பழைய கட்டிடங்கள் மற்றும் உத்தேச கட்டிடங்களில் மழைநீர் சேமிப்பு திட்டத்தினை செய்லபடுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் இதனை வலியுறுத்தி அரசாணை நிலை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ல் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நடைமுறையினை கட்டாயமாக | தீர்மான எண்160 அலுவலகக் குறிப்புகள் 1,2அனுமதிக் கப்பட்டன. |

பின்பற்றிடவும், புதிய கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு ஏற்படுத்த தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019-ல் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி இந்நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்கள், ஆழ்துளை கிணறுகள், நகராட்சி பள்ளி கட்டிடங்கிளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட விபரப்படி 3 எண்ணிக்கை பணிகளுக்கு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.(ந.க.எண்.2052/2019/இ1)

| வ.எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | செயலிழந்த ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளாக மாற்றம் செய்தல். | 2.50 |
| 2 | நகராட்சிக்கு சொந்தமான கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் புனரமைப்பு செய்தல். | 1.50 |
| 3 | துறையூர் நகராட்சி பள்ளி கட்டிடங்கள் மற்றும் அங்கன்வாடி கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஏற்படுத்துதல் மற்றும் புனரமைப்பு செய்தல். | 2.80 |

அலுவலக குறிப்பு:

1. வ.எண்.1 மற்றும் 2ல் உள்ள பணிகளுக்கு இந்நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| | | 2. வ.எண்.3ல் உள்ள பணிக்கு இந்நகராட்சி கல்வி நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.6.2019 | **11** | துறையூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்பு கட்டிடங்கள், சினிமா தியேட்டர்கள், கல்யாண மண்டபங்கள் தொழிற்சாலை கட்டிடங்கள், வணிகக் கட்டிடங்கள், வங்கிகள் மருத்துவ மனைகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்கள் செயல்படும் பழைய கட்டிடங்கள் மற்றும் உத்தேச கட்டிடங்களில் மழைநீர் சேமிப்பு திட்டத்தினை செயல்படுத்துதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அரசாணை நிலை எண்.138, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.11.10.2002-ல் ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள நடை முறையினை கட்டாயமாக பின்பற்றிடவும் மழை நீர் சேமிப்பு கட்டமைப்பு உடன்கட்டப்படுதல் புரைமைக்க வேண்டும் அறிவுப்பு படிவம் தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் திருச்சிராப்பள்ளி நிறுவனத்திடம் வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ.17,000/- மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>(ந.க.எண்.367615/டி1)<br>**அலுவலக குறிப்பு:**1) மன்றம் அனுமதி வழங்கலாம் மேற்படி செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். | தீர்மான எண்161 அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.6.2019 | **12** | துறையூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வரும் திரு.பி. துரைசாமி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2019ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 13.08.2007ன் படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்கு தொகை ரூ.10,000/- வழங்க வேண்டி உள்ளது. எனவே மேற்படி, பங்குத் தொகையினை திரு.பி. துரைசாமி, துப்புரவு பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.1328/2019/சி1)<br>**அலுவலக குறிப்பு:** அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | தீர்மான எண்162<br>அலுவலகக் குறிப்புகள்<br>அ)<br>ஆ)அனுமதிக் கப்பட்டன |
| 28.6.2019 | **13** | துறையூர் நகராட்சியில் காவிரி குடிநீர் விநியோகம் நான்கு பெரிய அளவிலான மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகள் மூலமும் சின்டெக்ஸ் தொட்டிகள் மூலமும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி நீர்த்தேக்க தொட்டிகளை இயக்குவதற்கு குடிநீர் பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி பகுதிகளுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்ய வால்வுகளை இயக்குவதற்கு 4 நபர்களை மாவட்ட ஆட்சியர் நிர்ணயித்துள்ள விலை விகிதத்தின் (ஊதியம்) ஒப்பந்த அடிப்படையில் பெற்று பணி செய்திட | தீர்மான எண்163<br>அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | ஒருவருட காலத்திற்கு ஆகும். உத்தேச செலவினம் ரூ.5.11 இலட்சதிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>(ந.க.எண்.462/2014/இ1)<br>**அலுவலக குறிப்பு**: மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனமதிக்கலாம் | |
| 28.6.2019 | **14** | துறையூர் நகராட்சியில், வார்டு எண்.24, லெட்சுமிகாந்தபுரத்தில் காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், அப்பகுதியில் உள்ள பகிர்மான குழாய் மிகவும் பழமையானதால் அவ்வப்பொழுது அடைப்பு மற்றும் பழுதுகள் ஏற்படுவதால் காவிரி குடிநீர் சீராக விநியோகம் செய்ய இயலாத நிலை ஏற்படுகிறது. இதன் காரணமாக, பழுதடைந்துள்ள பகிர்மான குழாய்களை சரிசெய்து சீரான முறையில் அப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2411/2019/இ1)<br>**அலுவலகக்குறிப்பு**: மேற்படி பணியினை குடிநீர் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்164 அனுமதிக்கப் பட்டது. |
| 28.6.2019 | **15** | துறையூர் நகராட்சியில், வார்டு எண்.9 பெரியார் நகர் பூங்கா இடத்தை சுற்றி முள்வேலி (Fencing) அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2410/2019/இ1) | தீர்மான எண்165 அனுமதிக்கப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலகக்குறிப்பு: மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.6.2019 | **16** | துறையூர் நகராட்சியில், அண்ணா பேருந்து நிலையத்தில் கட்டப்பட்டுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் இலவச சிறுநீர் கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி ஏற்படுத்துதல் மற்றும் SS Gate அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.2410/2019/இ1)<br>அலுவலகக்குறிப்பு: மேற்படி பணியினை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்166 அனுமதிக்கப் பட்டது. |
| 28.6.2019 | **17** | கட்டிட இடிபாடு கழிவு மேலாண்மை விதிகள் 2016 மற்றும் மின்னனு (E-Wastes) கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016 ஆகியவற்றின்படி துறையூர் நகராட்சியில் பொதுமக்களிடமிருந்து சேகராமாகும் கட்டிட இடிபாடு கழிவுகள் மற்றும் கழிவுகள் (E-Wastes) ஆகியவற்றை பொதுமக்கள் நகரில் இக்கழிவுகளுக்கென்று ஒதுக்கப்பட்ட மையங்களில் தாங்களே தங்களுடைய செலவில் ஒப்படைக்க வேண்டியது அவசியமாகிறது. அதன்படி,<br>1. கட்டிட மற்றும் இடிபாடு கழிவுகள்-பெரியார் நகர் புல எண்.458/1,2<br>2. E-Wastes (or) மின்னனு கழிவுகள்- பழைய கலவை உரக்கிடங்கில் அமைக்கப்பட்டுள்ள வள மீட்பு மையம் புல எண்-274. | தீர்மான எண்167 அனுமதிக்கப் பட்டது |

மேற்கண்ட இடங்களில் உரிய கழிவுகளை உரிய முறையில் பாதுகாப்பாக தங்களது செலவில் ஒப்படைக்க பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது. மேற்கண்ட இடங்களில் அல்லாமல் பிற இடங்களில் இக்கழிவுகளை கொட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது என்பதுடன் மீறுவோர் சட்டப்படி அபராதத்துடன் கூடிய தண்டனைக்குள்ளாக நேரிடும் எனவும் அறிவிக்கப்படுகிறது. மேலும் அவ்வாறு பெறப்படும் கட்டிட இடிபாடு கழிவுகளை பயன்படுத்திக்கொள்ள விரும்பும் பொதுமக்கள் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என்ற விபரத்தினை கீழ்க்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ் பெயர் | விளம்பரம் செய்யப்பட்ட நாள் | தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | மாலை மலர் திருச்சி பதிப்பு | 29.05.2019 | ரூ.1462 |

மேற்கண்ட தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கு ADWAVE ADVERTISING RIVATE LTD, CHENNAI, நிறுவனம் ரூ.1462/- வழங்க கேட்டுக்கொண்டுள்ளது. ஆகையால் தொகை வழங்க மன்றம் அனுமதி

<table>
<tr><td></td><td></td><td>வேண்டப்படுகிறது. (ந.க.எண்.760/2017/எச்1)<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.6.2019</td><td>18</td><td>துறையூர் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதி 2018-19ன் கீழ் வார்டு எண்.14 மருத்துவமனை சாலையில் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு புதிய ஆழ்துளை கிணறு, மின்மோட்டார் அமைத்து குடிநீர் விநியோகம் மற்றும் இதர பணிகள் மேற்கொள்வதற்கு மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.141 நாள்.31.05.2019-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.07% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.09% அதிகம்</td></tr>
</table>
<br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர் துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.07% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்168 அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td></td><td>(ந.க.எண்1951/2019/இ1)<br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.6.2019</td><td>19</td><td>துறையூர் நகராட்சியில் பொதுநிதி 2018-19ன் கீழ் அண்ணா பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள தார்சாலையானது பழுதடைந்துள்ளதால் இதனை சரிசெய்து சீரமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.50,000/-த்திற்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.140 நாள்.31.05.2019-ல் ஒப்புதல் வழங்கியதை தொடர்ந்து 21.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.<br><table><tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td>ஒப்பந்தப்புள்ளியில் சதவீதம்</td></tr><tr><td>1</td><td>திரு. K. சரவணன், ஒப்பந்ததாரர், துறையூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.08% குறைவு</td></tr><tr><td>2</td><td>திரு. T. இந்திரஜித், ஒப்பந்ததாரர், துறையூர்.</td><td>மதிப்பீட்டை விட 0.13% அதிகம்</td></tr></table><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் வ.எண்.1-ல் உள்ள திரு.K.சரவணன், ஒப்பந்ததாரர் துறையூர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட 0.08% குறைவாக உள்ளது ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.</td><td>தீர்மான எண்169 அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | (ந.க.எண்.1951/2019/இ1)<br><br>அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம் | |
| 28.6.2019 | **20** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவகளின் ந.க. எண். 28369/து3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோசிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 09.01.2019 அன்று ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 40 துப்புரவு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கும் மற்றும் நுண் உரக்கிடங்குகளை பராமரிப்பதற்கு 24 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு 31.01.2019ம் ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற நான்கு ஒப்பந்த புள்ளிகளில் தொழில் நுட்ப கலந்தாய்வில் தகுதியின்மை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டுள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கும், பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.07.2019 முதல் 30.09.2019 வரை (மூன்று மாதங்கள்) சுய உதவிக் குழுக்கள் மூலம் அவுட்சோர்ஸ் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு 24 பணியாளகளை நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களின் 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.7 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>அ.கு :பதிவு செய்யலாம். | தீர்மான எண்170 பதிவு செய்யப் பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| 28.6.2019 | **21** | இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணி, பொதுசுகாதார பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.28369/ஜெ3 நாள் 10.12.2018 உத்திரவின் படி 81 மனித ஆற்றல் சப்ளை செய்ய அவுட் சோர்சிங் முறையில் பணி மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் 09.01.2019 அன்று ஒப்பந்த அறிவிப்பு வெளியிடப்பட்டதில் திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு 40 துப்புரவு பணியாளகள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருடத்திற்கும் மற்றும் நுண் உரக்கிடங்குகளை பராமரிப்பதற்கு 24 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு 31.01.2019ம் ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டது. வரப்பெற்ற நான்கு ஒப்பந்த புள்ளிகளில் தொழில் நுட்ப கலந்தாய்வில் தகுதியின்மை அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி ரத்து செய்யப்பட்டுள்ளதால் திடக்கழிவு மேலாண்மை பணி, சுகாதார பணிகள், வெங்கடேசபுரம் குப்பைக்கிடங்கு 30.06.2019 முதல் மூடப்பட்டது. வீடு வீாக சென்று மக்கும் மக்காத கழிவுகளை தினசரி வீடுகளில் சேகரிக்கப்பட்டு வருகிறது. பொது மக்கள் பொது சுகாதாரம் நலன் கருதி மேற்படி பணிகளுக்கு 01.07.2019 முதல் 30.09.2019 வரை ( மூன்று மாதங்கள் ) சுய உதவிக் குழுக்கள் மூலம் அவுட்சோர்ஸ் மூலம் நுண்ணியிர் உரம் தயாரிக்கும் பணிக்கு பணியாளகளை32 நியமித்து மாவட்ட ஆட்சியர் திருச்சிராப்பள்ளி அவர்களின் 2017-18 ஆம் ஆண்டு நிர்ணயம் செய்யப்பட்ட தினக் கூலி ரூ.295 அடிப்படையில் ரூ.9 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கண்டுள்ள சுகாதார பணிகளை இந்நகராட்சி செவலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.4244/2018/எச்1)<br>அ.கு :பதிவு செய்யலாம் | தீர்மான எண்171 பதிவுசெய்ய ப்பட்டது |
| 28.6.2019 | **22** | தமிழ் நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019ன் கீழ் விதி 14ல் திட்ட அனுமதி அல்லது கட்டிட அனுமதி 5 ஆண்டுகள் மற்றும் ஒரு | தீர்மான எண்172 அனுமதிக்கப் |

| | | | |
|---|---|---|---|
| | | முறை காலநீட்டிப்பு 3 ஆண்டுகள் வழங்க புதிய கட்டிட அனுமதி கட்டணம் நிர்ணயம் செய்து நகர் மன்ற தீமான எண்.113 நாள்.07.03.2019ல் அனுமதிக்கப்பட்டதை தொடந்து மேற்கண்ட புதிய கட்டிட அனுமதி கட்டணத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி மூலம் மாவட்ட அரசிதழில் வெளியிட பக்கம் 1க்கு ரூ.2100/- வீதம் 5 பக்கங்களுக்கு ரூ.5500/- மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது-(ந.க.எண்879/2019/எப்1)<br>**அலுவலக குறிப்பு**: அனுமதிக்கலாம் | பட்டது. |
| 28.6.2019 | **23** | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட நுண் உரக்கிடங்குகளில் மறுசூழற்சி செய்ய இயலாத மக்காத கழிவுகள் அதிக அளவில் தேக்க மடைந்துள்ளன. இதனால் பெருமளவில் தீ விபத்தோ அல்லது பொது சுகாதார சீர் கேடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே பொது சுகாதார அவசர, அவசியம் கருதி தனியார் டிப்பர் லாரிகள் வாடகைக்கு எடுத்து, அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு மக்காத கழிவுகளை எடுத்து செல்லுவதற்குக்கான செலவின தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மதிப்பீட்டில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 3507/2016/எச்1)<br>**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்173 அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td>28.6.2019</td>
<td>24</td>
<td>
துறையூர் நகராட்சி பகுதியில் சமுதாய கழிவறை, மார்க்கெட் கழிவறை மற்றும் பவுண்டுபட்டி கழிவறை அமையப்பெற்ற கழிவுறை மலக்குழி சுத்தம் செய்ய 12.02.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>வேலையின் பெயர்</td><td>தயாளன் செப்டிக் டேங் கிளினிஸ் திருச்சி-13</td><td>வைஷ்ணவி செப்டிக் டேங் கிளினிஸ் துறையூர்</td><td>மாதவன் செப்டிக் டேங்க் கிளினிஸ் துறையூர்</td></tr>
<tr><td>1</td><td>துறையூர் நகராட்சிக்கு உட்பட்ட சமுதாய கழிவறை, மார்க்கெட் கழிவறை மற்றும் பவுண்டுபட்டி கழிவறை</td><td>(நடை 1க்கு) ரூ.2600/-</td><td>(நடை 1க்கு) ரூ2500./-</td><td>(நடை 1க்கு) ரூ. 2650/-</td></tr>
</table>
<br>
அலுவலக குறிப்பு:
<br>
வரப்பெற்ற 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த துறையூர் அவர்களின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம். மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர்/ஆணையர் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரிமைக்கும், குறைந்த விலைப்புள்ளி அளித்த துறையூர் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம்
</td>
<td>தீர்மான எண்174 ஒப்புதல் வழங்கப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்புதல் வழ'ங்கலாம். | |
| 28.6.2019 | **25** | துறையூர் நகராட்சியில் கட்டிட அனுமதி கட்டணம் (ம) திட்ட அனுமதி கட்டணம் ஆகியவற்றை ஏற்கனவே, வசூலிக்கும் தொகையிலிருந்து 50 சதவீதம் வசூலிக்கவும் ஒரு முறை கால நீட்டிப்பு 3 ஆண்டுகள் மட்டும் வழங்க நகர்மன்ற தீர்மான எண் 113 நாள் 07/03/2019-ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து மேற்கண்ட கட்டிட அனுமதி கட்டணத்தை மாவட்ட அரசிதழில் வெளியிட பக்கம் ஒன்றிற்கு ரூ. 2100/- வீதம் 5 பக்கங்களுக்கு ரூ. 10500/- க்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம் | தீர்மான எண்175 அனுமதிக்கப் பட்டது |
| 28.6.2019 | **26** | இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாங்கப்பட்ட 9 மின்கலம் பொருத்திய மூன்று சக்கர வாகனம் (BOV) வீடு வீடாக சென்று மக்கும் மக்காத கழிவுகளை தினசரி 400 வீடுகளில் சேகரிக்கப்பட்டு வருகிறது. மின்கலம் பொருத்திய மூன்று சக்கர வாகனங்களில் (BOV) ஏற்படும் சிறு பழுதுகளை சரிப்பார்க்க பணிக்கு 27.06.2019 வரை விளைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விவரப்படி விளைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | தீர்மான எண்176 அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr>
<td></td>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி விவரம் (ஒரு வாகனங்களுக்கு ஆண்டு பராமரிப்பு செலவு)</th></tr>
<tr><td>1</td><td>BHAGAVATHI ELECT RICKSHAW, PERUMAL KOVIL(OPP), MEENASHI NEW RAMANAD ROAD, MADURAI.9</td><td>ரூ.8850/-</td></tr>
<tr><td>2</td><td>UNAS E RICKSHAWS, SHOWROOM:14/63A, MADURAI ROAD, NEAR RELIANCES PETROL BUNK KOVILOOR. KARAIKUDI.</td><td>ரூ.5230/-</td></tr>
<tr><td>3</td><td>MADURAI MOTORS, SHOP NO:16/25, KALAVASAL BYPASS, PALANGANATHAM, MADURAI.3</td><td>ரூ.10600/-</td></tr>
</table>
மேற்க்கண்ட விளைப்புள்ளிகளில் வரிசை எண் 2ல் உள்ள நிறுவனத்தின் விளைப்புள்ளி குறைவாக உள்ள நிறுவனத்திற்கு பணி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.2126/2019/எச்1)<br>
அலுவலக குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>28.6.2019</td>
<td>27</td>
<td>துறையூர் நகராட்சியில், வார்டு எண்.7 சந்தை ரோட்டில் அமைந்துள்ள சிறுபாலம் பழுதடைந்த நிலையில் இருந்ததால் 20.04.2019 அன்று பெய்த கனமழையின் காரணமாக அந்த பாலம் உடைந்துவிட்டது. இதனால், மழைநீர்</td>
<td>தீர்மான எண்177 பதிவு செய்யப் பட்டது.</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | வடிகால் நீரானது அப்பகுதியின் அருகாமையிலுள்ள தாழ்வான குடியிருப்பு பகுதிகளுக்கு சென்றுவிட்டதால், அப்பகுதி பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதி மேற்படி பாலத்தினை சரி செய்வதற்கு ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டு மேற்படி பணியினை பொதுமக்கள் நலன் கருதி உடன் செய்து முடிக்க வேண்டிய அவசர அவசியம் காரணமாக, தற்போது பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் இப்பணியினை நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீபில்டர்ஸ், செந்தாரப்பட்டி என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டது மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**: பார்வையிட்டு பதிவு செய்யலாம் | |
| 28.6.2019 | **28** | நகராட்சி அலுவலகத்தில் பயன்பாட்டில் உள்ள கணினி, பிரிண்டர் மற்றும் இதர உபகரணங்கள் ஆண்டு பராமரிப்பு காலம் Sumaraj IT Solution நிறுவனத்திடம் 31.07.2019 தேதியுடன் முடிவடைவதால் மேற்படி ஒப்பந்தத்தை 01.08.2019 முதல் 31.07.2020 வரை ஒரு வருடத்திற்கு புதுப்பித்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>மேலும், Ascant e-Digit Solution(p) Ltc., நிறுவனத்தின் மூலம் 01.09.2016 தேதியில் பெறப்பட்ட 4 எண்ணம் கணினி, 3 எண்ணம் பிரிண்டர் (Laserjet) உத்திரவாத காலம் முடிவடைவதால் அதனையும் ஒரு வருட காலத்திற்கு மேற்படி Sumaraj IT Solution நிறுவனத்திடமே பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் இதற்கான உத்தேச செலவினம் ரூ.90,000/- + GST-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. | தீர்மான எண்178 அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப் பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவலக குறிப்பு:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பராமரிப்புத் தொகை ரூ.90,000/- + GST பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.6.2019 | **29** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மூலம் மினி பவர் பம்பு மற்றும் கைபம்பு அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள ரூ.5,00,000/- மதிப்பீட்டில் 2016ம் ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் திரு.V.பாஸ்கர் (TWAD Board Contractor) துறையூர் அவர்கள் வாயிலாக மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டு முழுவதுமான மதிப்பீட்டுத் தொகை செலவிடப்பட்டுள்ளது. தற்போது, பாராளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருப்பதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில், மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்த அடிப்படையிலேயே அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/- மதிப்பீட்டில் மேற்படி பணியினை மேற்கொள்ள மேலும் 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.3757/2016/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்179 அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப் பட்டன |

| | | | |
|---|---|---|---|
| 28.6.2019 | **30** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளுக்கும் காவிரி குடிநீர் விநியோகம் 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளிலிருந்து குடிநீர் பிரதான மற்றும் பகிர்மான குழாய்கள் வழியாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அவ்வப்போது குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் குழாய்களின் உடைப்பினை சரிசெய்யவும் ரூ.3,00,000/- மதிப்பீட்டில் 2016 ஆண்டு முதல் ஒப்பந்த அடிப்படையில் திரு.V.பாஸ்கர் (TWAD Board Contractor) துறையூர் அவர்கள் வாயிலாக மேற்படி பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீட்டுத் தொகை முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. தற்போது, பாராளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருப்பதால், புதிய ஒப்பந்தப்புள்ளி கோர இயலாததால் மேற்குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் வாயிலாகவே அதே விலை விகிதத்தில், மதிப்பீட்டை விட 0.03% குறைவாக ஒப்பந்த அடிப்படையிலேயே அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.50,000/- மதிப்பீட்டில் மேற்படி பணியினை மேற்கொள்ள மேலும் 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.3756/2016/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்180 அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப் பட்டன |
| 28.6.2019 | **31** | துறையூர் நகராட்சி பகுதி பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் 3 கிலோ அளவுள்ள கேஸ் குளோரினேசன் அமைப்பு ஏற்படுத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கேஸ் குளோரினேசன் அமைப்பை 100kg எடை கொண்ட சிலிண்டர் பயன்படுத்தி பாதுகாக்கப்பட்ட | தீர்மான எண்181 அலுவலகக் குறிப்புகள் 1,2 |

| | | | |
|---|---|---|---|
| | | குடிநீர் வழங்குவதற்கு ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் சிலிண்டர் சப்ளை செய்ய R.K.Enterprises, Palakkad, Kerala என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு தொகை முழுவதும் செலவிடப்பட்டுள்ளது. தற்போது பாராளுமன்ற தேர்தல் 2019 நடைபெறுவதை முன்னிட்டு, தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் இருப்பதால், புதிய விலைப்புள்ளி கோர இயலாததால் மேற்படி நிறுவனம் வாயிலாகவே அதே விலை விகிதத்தில் சப்ளை செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ.35,000/-க்கு பணியினை மேற்கொள்ள மேலும் 3 மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2258/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15-ன் கீழ் பணி மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டன |
| 28.6.2019 | **32** | துறையூர் நகராட்சி பகுதிகளுக்கு தினந்தோறும் தோராயமாக 3.00MLD குடிநீர் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கட்டுப்பாட்டில் உள்ள 2.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட தரைமட்ட நீர்த்தேக்கத்தொட்டியின் மூலம் 4 மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டிகளுக்கு நீரேற்றப்படுகிறது. பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு பழைய நகராட்சி அலுவலகத்தில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டியில் 3 கிலோ அளவுள்ள கேஸ் குளோரினேசன் அமைப்பு ஏற்படுத்தி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி கேஸ் குளோரினேசன் அமைப்பை தொடர்ந்து தடையின்றி இயக்குவதற்கு 100kg எடை கொண்ட சிலிண்டர் பயன்படுத்தப்பட வேண்டி உள்ளது. அதற்காக தற்போது ஒருவருட கால பயன்பாட்டிற்கு | தீர்மான எண்182 அலுவலகக் குறிப்புகள் 1,2 அனுமதிக்கப் பட்டன. |

| | | | |
|---|---|---|---|
| | | உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.2258/2017/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | |
| 28.6.2019 | **33** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் ஆழ்துளை கிணறு மூலம் மினி பவர் பம்பு மற்றும் கைபம்பு அமைத்து பொதுமக்களுக்கு குடிநீர் அல்லாத பிற உபயோகத்திற்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வப்போது ஏற்படும் மின்மோட்டார் மற்றும் கைபம்புகளில் பழுதுகளை சரிசெய்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ள 2019-20ம் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.( ந.க.எண்.3757/2019/இ1)<br>**அலுவலக குறிப்பு** :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | தீர்மான எண்183 அனுமதிக்கப் பட்டது |
| 28.6.2019 | **34** | துறையூர் நகராட்சியில், அனைத்து வார்டுகளிலும் குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் தங்கு தடையின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. அவ்வாறு குடிநீர் விநியோகம் செய்யும் போது அவ்வப்போது ஏற்படும் அடைப்பு மற்றும் திடீர் உடைப்புகளினால் குடிநீர் விநியோகம் தடைபடும் சூழ்நிலை உருவாகிறது.<br>எனவே, பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்க ஏதுவாக குடிநீர் விநியோக குழாய்களில் ஏற்படும் அடைப்பினை சரி செய்யவும் மற்றும் திடீர் உடைப்பினை சரி செய்யவும் 2019-20ம் ஆண்டிற்கு குடிநீர் பராமரிப்பு பணிக்காக தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி | தீர்மான எண்184 அனுமதிக்கப் பட்டது |

<table>
<tr><td></td><td></td><td>வேண்டடப்படுகிறது.( ந.க.எண்.3756/2019/இ1)<br>அலுவலக குறிப்பு :<br>மேற்படி செலவினம் குடிநீர் வடிகால் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td><td></td></tr>
<tr><td>28.6.2019</td><td>35</td><td>மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வித் துறையின் கீழ் உள்ள அரசு நகராட்சி தொடக்க நடுநிலை / உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் உள்ள கழிவறைகளை பராமரித்தல் தொடர்பாக தமிழ் நாடு சட்டமன்ற பேரவை விதி எண். 110ன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.<br>இதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்க்கண்ட நகராட்சி/அரசு பள்ளிகளில் கழிவறைகள் பராமரித்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 01.02.2018 முதல் 28.02.2019 முடிய ஓர் ஆண்டு காலத்திற்கு உத்திரவு வழங்கப்பட்டது. மேலும் தற்போது மக்களவை தேர்தல் 2018 நடைபெற இருப்பதை தொடர்ந்து 10.03.2019 முதல் தேர்தல் நன்னடத்தை விதி (Code of Conduct) அமுலில் இருப்பதால் இப்பணிக்கு தேர்தல் முடியும் காலம் வரை ஒப்பந்தப்புள்ளி கோர இயலாது ஆகவே, ஏற்கனவே பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின் படி பணி மேற்கொள்ள ஒப்பந்தக்காரர் ஒப்புதல் அளித்ததை தொடந்து 01.03.2019 முதல் 30.09.2019 முடிய 6 மாத காலத்திற்கு பள்ளி கழிவறைகள் மற்றும் பள்ளி வளாகங்கள் சுத்தம் செய்ய கீழ்க்கண்ட எண்ணிக்கையின் அடிப்படையில் மனித ஆற்றல் சப்ளை அதற்கான செலவினத்திற்கு மன்ற ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.
<table>
<tr><td>வ.எண்</td><td>பள்ளியின் பெயர்</td><td>மாணவ/மாணவியர் சேர்ந்து பயிலும் பள்ளிகள்</td><td>மாணவியர் மட்டும் பயிலும் பள்ளி</td><td>மாணவர் மட்டும் பயிலும் பள்ளி</td></tr>
</table>
</td><td>தீர்மான எண்185 அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சி தொடக்கப்பள்ளி | 1- Female<br>1- Male | _ | _ |
| 2 | நகராட்சி உயர்நிலைப்பள்ளி | 1- Sweeper( Male) | _ | _ |
| 3 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி | | 1- Female<br>2- Female (Sweeper) | _ |
| 4 | அரசு ஆதிதிராவிடர் நல துவக்கப்பள்ளி | 1- Female<br>1- Male | _ | _ |
| 5 | அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி | 1- Female<br>1- Male<br>1- Sweeper( Male) | _ | _ |
| | | 8 | 3 | - |

அலுவலக குறிப்பு

01.03.2019 முதல் 30.09.2019 முடிய 6 மாத காலங்களுக்கு உதயா அசோசியேட்ஸ் அளித்த ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் மனித ஆற்றல் சப்ளை செய்யும் அதற்கான செலவினம் ரூ.505120/- மன்ற அனுமதிக்கலாம்.

| | | | |
|---|---|---|---|
| 28.6.2019 | **36** | துறையூர் நகராட்சியில் துப்புரவு பணியாளராக பணியாற்றி வரும் திருமதி. டி. வீரம்மாள் என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2019ல் ஓய்வு பெற உள்ளார். ஆதலால் அரசாணை எண் 111 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் | தீர்மான எண்186 அலுவலகக் குறிப்புகள் அ)ஆ) |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கல் துறை நாள் 13.08.2007ன் படி அன்னாருக்கு வழங்க வேண்டிய சிறப்பு சேமநலநிதிக்கான நிர்வாக பங்கு தொகை ரூ.10,000/- வழங்க வேண்டி உள்ளது. எனவே மேற்படி, பங்குத் தொகையினை திருமதி. டி. வீரம்மாள், துப்புரவு பணியாளருக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.1330/2019/சி1)<br>**அலுவலக குறிப்பு:** அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) மேற்படி செலவினம் நகராட்சி பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | அனுமதிக்கப் பட்டன |

ஒம்/- வே.நவேந்திரன்,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்,
துறையூர் நகராட்சி.

//உண்மை நகல்//

ஆணையர்
துறையூர் நகராட்சி.